# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)
(பா.சு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109412

1. District மாவட்டம் : Virudhunagar | PS காவல்நிலையம் : Vigilance and Anti Corruption | Year ஆண்டு : 2024 | FIR No. மு.த.அ. எண் : 07/2024 | Date நாள் : 18.07.2024

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 — Sections பிரிவுகள்: u/s 7
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 18.07.2024 — Date to நாள் வரை :
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : 11.30 hrs — Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.07.2024 — Time நேரம் : 16.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.07.2024 — Time நேரம் : 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — About 45 Kms / South West
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி — தாயில்பட்டியில் கோட்டூர் பஸ் நிறுத்தம் அருகே
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு.R.ரவிச்சந்திரன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — திரு.ராமசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 02.05.1971
(d) Nationality : நாட்டினம் — Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — பிளாஸ்டிக் கம்பெனி
(g) Address : முகவரி — எண்.1/61, மெயின் தெரு, சுப்பிரமணியபுரம், தாயில்பட்டி வழி, சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.சேதுராம், உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், துணை மின் நிலையம், வெம்பக்கோட்டை, வெம்கன்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு — Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 18.07.2024 மாலை 16.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், சிவகாசி தாலுகா, தாயில்பட்டி வழி, சுப்பிரமணியபுரம், மெயின்தெரு, கதவு எண்.1/61 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.ராமசாமி என்பவரின் மகன் திரு.R.ரவிச்சந்திரன் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகாரை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 18.07.2024 இரவு 19.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.சேதுராம், உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், துணை மின் நிலையம், வெம்பக்கோட்டை, வெம்பகோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 18/7/24 — [signature] 18/7/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

(C. SALVAN THURAI)
Name: பெயர் Inspector of Police
Rank: நிலை .................... No. எண் ....................
VYAC
Virudhunagar.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19/7/24 at 08-30 hrs.

விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.07/2024 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2024 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.R.ரவிச்சந்திரன் அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் R.ரவிச்சந்திரன், வயது 54/2024, த/பெ.ராமசாமி, எண்.1/61, மெயின் தெரு, சுப்பிரமணியபுரம், தாயில்பட்டி வழி, சிவகாசி (தாலுகா), விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர். அய்யா, நான் விருதுநகர் மாவட்டம், சிவகாசி தாலுகா, தாயில்பட்டி வழி, சுப்பிரமணியபுரத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் இந்திய ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது சுப்பிரமணியபுரத்தில் உமா பிளாஸ்டிக் என்ற பெயரில் பட்டாசு தயார் செய்வதற்காக தேவைப்படும் பிளாஸ்டிக் பொருட்களை தயாரிக்கும் கம்பெனியை நடத்தி வருகிறேன். எனது கம்பெனிக்கு மும்முனை மின் இணைப்பு எண்.07243014555-ன்படி மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. எனது கம்பெனிக்கு Additional Load மின்சாரம் வழங்க கேட்டு 02.02.2024 அன்று உதவிப்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் வெம்பக்கோட்டை அலுவலகத்தில் மனு (எண்.200072430224154) செய்து, அதே தேதியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு இணையதள வழியில் அதற்குரிய கட்டணம் ரூ.27,110/- பணத்தை செலுத்தினேன். எனது கம்பெனிக்கு Additional Load மின்சாரம் வழங்க கேட்டு மனு கொடுத்து நீண்ட நாட்களாகியும், எந்த வேலையும் நடக்காதால் மேற்படி மனு சம்மந்தமாக இன்று 18.07.2024 காலை சுமார் 11.30 மணியளவில் வெம்பக்கோட்டை உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று உதவிப்பொறியாளர் AE திரு.சேதுராம் அவர்களை சந்திக்க சென்றேன். அங்கு AE இல்லாததால், அலுவலகத்திலிருந்த ஒருவரிடம் AE பற்றி கேட்டேன். அப்போது அவர் AE தாயில்பட்டி அருகே உள்ள EB line செக் பண்ண போய்விட்டதாக தெரிவித்தார். எனவே நான், தாயில்பட்டியில் உள்ள கோட்டூர் பஸ் ஸடாப் அருகே சென்று EB line-லில் நடைபெற்ற வேலையை மேற்பார்வை செய்து கொண்டிருந்த அவரை சந்தித்து, என்னுடைய கம்பெனிக்கான Additional Load மின்சாரம் வழங்குவதற்கான வேலை நடைபெறாதது குறித்து பேசினேன். அதற்கு அவர் Additional Load மின்சாரம் வழங்குதவற்காக டிரான்ஸ்பார்மரில் மாட்டுவதற்கு தேவையான பொருட்களை ரெடி பண்ணியாச்சு, நான் ஆட்களை கொண்டு வந்து வேலை பார்க்கனும், நீங்க கவர்மெண்ட்டுக்கு

நான் பணம் கட்டியிருக்கீங்க, என்னை இதுவரைக்கும் கவனிக்கவே இல்லை, உங்களுக்கு Additional Load மின்சாரம் கொடுக்கனும்னா கொஞ்சம் செலவாகும் என்று சொன்னார். அப்போது நான் என்ன சார் செலவாகும், ஏற்கனவே பணம் கட்டி இரசீது வாங்கிட்டேன் இன்னமும் கவர்மெண்ட்டுக்கு பணம் கட்டி இரசீது வாங்கனுமான்னு கேட்டேன். அதற்கு AE என்னிடம், அண்ணாச்சி, பெரிய தொழில்லாம் பண்றீங்க, இதுகூட தெரியாதா, நீங்க கட்டின பணம் கவர்மெண்டுக்கு போயிரும், எங்களை கவனித்தால்தான், உங்க வேலையை சீக்கிரம் முடிக்க முடியும் இல்லாட்டி அந்த வேலை அப்படியே தான் கிடக்கும். நீங்களும் சரியா தொழில் பண்ண முடியாது என்று சொன்னார். அதற்கு நான், என்னசார் செலவாகும் என்று கேட்டேன். அப்போது AE என்னிடம் நீங்க எனக்கு பணம் ரூ.30,000/-த்தை கொடுத்து விட்டால், உங்க வேலைய சீக்கிரம் முடித்து விடுவேன் நீங்களும் உங்க தொழிலை சிரமமின்றி பார்க்கலாம் என்று சொன்னார். அதற்கு நான் சார், நானே பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் தொழில் செய்து வருகிறேன். எனக்கு Additional Load இல்லாததால், உற்பத்தியும் குறைவாக இருக்கு, சரக்கும் சரியாக விற்பனை ஆகாம இருக்கு. அதனால என்னால அவ்வளவு பணம் புரட்ட முடியாது சார் என்று சொன்னேன். அதற்கு AE என்னிடம், "அண்ணாச்சி நீங்களே இப்படி பஞ்சப்பாட்டு பாடினா எப்படி, நீங்க நான் சொன்னபடி ரூ.30,000/- பணத்தை கொடுத்தால்தான் உங்க வேல வேகமா முடியும், இல்லாட்டி இப்படியே நீங்க அலைய வேண்டியதுதான்" என்று சொன்னார். அதற்கு நான் கொஞ்சம் பார்த்து செய்யுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர், சரி நீங்க இவ்வளவு சொன்னதால, முதல்ல ரூ.10,000/- பணத்தையாவது என்னிடம் கொடுத்துடுங்க, உங்க வேலையை வேகமாக முடித்து கொடுத்துவிடுவேன் என்றும், வேலை முடித்த பிறகு மீதிய கொடுங்க, தரவில்லையென்றால் உங்க வேலை இப்போதைக்கு முடியாது என்றும், நீங்க யாரிடம் புகார் சொன்னாலும் இத கண்டுக்க மாட்டாங்க என்றும் கறாராக சொல்லிவிட்டார். AEக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை, இருந்தாலும் வேறு வழியில்லாமல் அவரிடம், சரிசார் நான் பணத்தை ரெடி பண்ணிட்டு சார வந்து பார்க்குறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். AE சேதுராம் லஞ்சமாக என்னிடம் கேட்ட ரூ.10,000/- பணத்தை ரெடிபண்ணி கொண்டு வந்துள்ளேன். என்னுடைய கம்பெனிக்கு Additional Load மின்சாரம் வழங்குவதற்காக என்னிடம் ரூ.30,000/- பணத்தை லஞ்சமாக கேட்டு, அதில் முன்பணமாக ரூ.10,000/- பணத்தை கேட்ட வெம்பக்கோட்டை மின்சார வாரிய AE சேதுராம் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd) R.Ravichandran 18/7/24 Sir, Received the

complaint on 18/7/24 at 16.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.7/2024 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on 18/7/24 at 19.00 hrs and took up for investigation. (Sd) (C.Salvan Thurai) 18/7/24 Inspector of Police, V&AC, Virudhunagar.

The original FIR along with original complaint is submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

18/7/24
(C.SALVAN THURAI)
Inspector of Police
V&AC
Virudhunagar.